DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. C.C.No.1267/2025 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | பட்டு |
| Father's Name | க/பெ.பஞ்சபாண்டி |
| Village | தூத்துக்குடி –சவேரியார்புரம் |
| Taluk | |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சவேரியார்புரம் கணேஷ் நகரில் குடியிருந்து வருகிறேன். உப்பளத்தில் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் பஞ்சபாண்டி கீழே விழுந்ததில் அவருக்கு இடது கையில் அடிபட்டுவிட்டது. அவரை தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம். ஆஜர் எதிரியை பார்க்கவில்லை. முத்தையாபுரம் போலிசார் அரசு மருத்துவமனைக்கு வந்து எனது கணவரிடம் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலிசார் என்னை விசாரித்த போது கடந்த 05.12.2024ம் தேதி நான் எனது மகள் மீனாட்சியும் மருமகன் ரூபன் சக்கரவர்த்தியும் கணவர் பஞ்பாண்டி ஆகியோர் வீட்டில் இருக்கும் போது மதியம் 1.00 மணியளவில் ஆஜர் எதிரி எங்கள் வீட்டுக்குள் அத்து மீறி நுழைந்து எனது மகள் மீனாட்சியை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி கையை பிடித்து இழுத்து மிரட்டியதாகவும் ஆஜர் எதிரி எனது கணவரை இடது கன்னத்தில் கையால் அடித்ததாகவும் என்னையும் மருமகனையும் அடித்ததாகவும் பின்னர் எதிரி கத்தியால் என் கணவரின் இடது உள்ளங்கையில் வெட்டி காயம் ஏற்படுத்திவிட்டதாகவும் நானும் எனது கணவர், மகள், மருமகன் ஆகியோர் சத்தம்போடவும் ஆஜர் எங்களைப்பார்த்து உங்களை வெட்டி கொல்லமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் , எனது கணவர் 108 ஆம்புலன்சு மூலமாக துூத்துக்குடி அரசு மருத்துமனையில் வெளிநோயளியாக சிகிச்சை பெற்று வீட்டிற்கு வந்துவிட்டு மறுநாள் 06.12.2024ம் தேதி நடவடிக்கை எடுக்குமாறு முத்தையாபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் அவரை வழக்கில் இருந்து காப்பற்றப்பட வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை</u>

**ஒம்/-L.மகேஸ்வரி,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**